*5*

# மூப்பர் நியமன ஆராதனை

*இங்கே இந்தப் புறக்குறிப்பில் கொடுத்துள்ள ஆராதனை முறையைத்தான் நான் அநேக உள்ளூர் சபைகளில் பயன்படுத்தியிருக்கிறேன்.*[1]

***ஆராதனைக்கு முன்***

*மூப்பர்களாக ஏற்படுத்தப்படப் போகிற மனுஷர்களும் அவருடைய மனைவிகளும் மேடைக்கு அருகில் முன்வரிசையில் அமரப்பண்ணப்பட வேண்டும்.*

***துவக்கப் பாடல் மற்றும் ஜெபம்***

***கர்த்தருடைய பந்திப் பாடல்***

***கர்த்தருடைய பந்தி***

***காணிக்கை***

***துவக்கக் குறிப்புகளும் ஜெபமும்***

*இந்த ஆராதனையின் நோக்கம் பற்றிய குறிப்புரையும் அப்படிப்பட்ட ஆராதனையை நடத்துவதற்கான வேதாகமம் சார்ந்த பின்னணியும் பிரசங்கியாரால் கொடுக்கப்பட்டது. துவக்கத்திற்கு சாத்தியமான குறிப்புரை:* "இன்று நாம் இங்கே தேவனைத் தொழுது கொள்ளும்படி ஒன்றாகக் கூடி வந்திருக்கிறோம் மற்றும் ஆவிக்குரிய ஐக்கியத்தை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளவும் வந்திருக்கிறோம். இந்த ஐக்கியத்தை வெளிப்படுத்த ஏதுவாக அநேகமுறை கூடித் தரித்திருந்துள்ளோம்: ஒன்றாகப்பாடி, ஒன்றாக ஜெபித்து, விசேஷமாக கர்த்தருடைய பந்தியிலே ஒன்றாக பங்கு பெற்றுள்ளோம். இப்பொழுது நாம் இந்த ஐக்கியத்தின் இன்னொரு வெளிப்படுத்துதலில் பங்கு பெறப்போகிறோம்: இந்த உள்ளூர் சபையிலே மூப்பர்களை ஏற்படுத்துவதில் நம்முடைய பொதுவான பங்களிப்பு இடம் பெறப்போகிறது."

*தேவன் ஆராதனையை ஆசீர்வதிக்கும்படி ஜெபித்து அதைத் தொடர்ந்து (மேற்குறித்த) இந்தக் காரியம் நடைபெற்றது. (உள்ளூர் சபையில் ஏற்கனவே சிலர் மூப்பர்களாக பணியாற்றிக் கொண்டிருந்தால், அவர்களில் ஒருவரால் நடப்பிக்கப்பட வேண்டும்.)*

***பாடல்***

***மூப்பர்களின் கடமைகளைக் குறித்த குறிப்புரைகள்***

*மூப்பர்களின் பணியைக்குறித்து பிரசங்கியார் பொதுவான குறிப்புரையை*

வழங்கக்கூடும்.

மூப்பர்கள்/மேய்ப்பர்கள் ஆகியோரின் பணி குறித்து பேசும் வசனப்குதிகளை பல மனிதர்கள் வாசிக்க வேண்டும். இந்த வசனப்பகுதிகள் கீழ்வரும் வசனங்களையும் உட்படுத்தியிருக்க வேண்டும்.

*நடபடிகள் 20:17, 28; 1 பேதுரு 5:1-4; 1 தீமோத்தேயு 3:1-7*
*தீத்து 1:5-9; எபிரேயர் 13:7, 17*
*எசேக்கியேல் 34:1-10; யோவான் 10:11-18*

**பாடல்**

**மூப்பர்களை ஏற்படுத்துதல்**

(ஏற்கனவே சில ஆண்கள் மூப்பர்களாக பணியாற்றிக் கொண்டிருந்தால், முதலாவதாக அவர்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.)

மூப்பர்களாக நியமனம் பெறும் நபர்களையும் அவர்களுடைய மனைவிகளையும் அறிமுகப்படுத்துதல். அவர்களை அறிமுகப்படுத்தும்போது, முன்பதாக நிற்க செய்து, கூட்டத்தாரைப் பார்த்து நிற்கச் சொல்ல வேண்டும். அறிமுகப்படுத்துதல் நிறைவு பெற்றபின், அவர்களுடைய மனைவிகளை அவர்களுடைய இருக்கைகளுக்கு அனுப்பிவிடலாம்.

கூட்டத்தார்களை எழுந்து நிற்கச் சொல்ல வேண்டும்.

கீழ்வரும் காரியங்களை புதிய மூப்பர்கள் பொறுப்பேற்று, உறுதிமொழி அளிக்க வேண்டும்:

> *"உங்கள் மீது உறுதியான நம்பிக்கை வைத்து இந்த உள்ளூர் சபை உங்களை மூப்பர்களாக தேர்ந்தெடுத்திருக்கிறார்கள், தேவ ஒத்தாசையாலும் உங்களுடைய திறமையினாலும், சிறப்பான செயலைச் செய்து உங்களின் நம்பிக்கைக்குரிய இடத்தை நிறைவு செய்வீர்களா? உங்களின் கடமைகளைப் பற்றிய நிறைவான அறிவைப் பெற்று, உள்ளூர் சபையின் கண்காணிப்பாளர்களில் ஒருவராக பொறுப்பேற்க சம்மதிக்கிறீர்களா?"*[2]

சபையின் அங்கத்தினர்களும் புதிய மூப்பர்களை ஏற்படுத்துகிற விஷயத்தில் அவர்களுடைய அர்ப்பணம் குறித்த வாக்குறுதி அளிக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய எளிய கை அசைவால் தங்கள் உறுதியை தெரியப்படுத்தினால் போதும். பிறகு அவர்களிடம் கேட்கப்படுவதாவது,

> *"நீங்கள் உங்களுடைய சிறப்பான திறமையால் இந்த மனுஷர்களுடைய கரங்களை உயர்த்தி பிடித்து, அவர்களுடைய பணிகளை எளிதாக்கி, கடினப்படுத்தாமல், தேவனுடைய வார்த்தையின்படியான வேண்டுகோள்களை அவர்கள் வைக்கிறவரை நீங்கள் உண்மையாகவே உங்கள் தலைவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குவீர்களா?"*

**புதிய மூப்பர்களுக்கும் உள்ளூர் சபைக்கும் ஜெபம்**

**பாடல்**

கூட்டத்தார் நின்று கொண்டிருக்கும் போது, அவர்கள் ஒருவருக்கொருவர்

*கைகளை கோர்த்துக்கொண்டு "இணைக்கும் பந்தங்கள் ஆசீர்வதிக்கப்படுவதாக" என்ற பாடலைப் பாட வேண்டும்.*

***புதிய மூப்பர்களின் மாறுத்தரம்***

*கூட்டத்தார்களை அமரச் சொல்லிவிடவேண்டும். (ஏற்கனவே மூப்பர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தால், அவர்கள் புதிய மூப்பர்களை வரவேற்று பேசுவார்கள்.)*

*புதிய மூப்பர்கள் ஒவ்வொருவரும் சில வார்த்தைகள் பேசலாம்.*

***முடிவுரைக் குறிப்புகள்***

*(அந்த உள்ளூர் சபையில் ஏற்கனவே மூப்பர்கள் இருந்தால், அவர்களில் ஒருவர் சில குறிப்புகளை இவ்வேளையில் கொடுக்கலாம்.)*

*நிறைவுக் குறிப்புரையை பிரசங்கியார் கொடுக்க வேண்டும். சபையார் எப்படி "கைகளை புதிய மூப்பர்கள் மேல்" வைத்து ஜெபிக்க வேண்டும் என்று பிரசங்கியார் சில ஆலோசனைகளைக் கொடுக்கலாம்: "அற்புதவரங்களைக் கொடுக்கும்படி இனியும் கைகளை மேலே வைப்பதில்லை, ஆனால் அவர்களுக்கு உறுதியும், நம்பிக்கையும் கொடுக்கும்படி இந்த மனுஷர் மேல் 'கைகளை வைத்து' தோளைத் தட்டிக் கொடுத்தோ கை குலுக்கியோ அல்லது கட்டித்தழுவியோ நமது உணர்வுகளை, 'நாங்கள் உங்களை நேசிக்கிறோம், உங்களுக்குப் பின் பலமாக இருக்கிறோம்' என்று சொல்ல வேண்டும்."*

***சுருக்கமான அழைப்பு***

***அழைப்புப் பாடல்***

***முடிவுப் பாடலும் ஜெபமும்***

## *பரிசீலிக்க கூடுதல் நடைமுறை*

*என்னுடைய மனைவியும் நானும் அர்கென்ஸாஸிலுள்ள ஜட்சனில் குடியிருந்தபோது, அங்கிருந்த பிரசங்கியார், கிளென் பேஸ், மனதைத்தொடும் அநேக மூப்பர் நியமன ஆராதனையை நடத்தியிருக்கிறார். ஆராதனை துவங்குவதற்கு முன் மேடையின் மேல் அநேக நாற்காலிகளைப் போடுவார், நியமனம் பெறும் ஒவ்வொரு மூப்பருக்கும் ஒரு நாற்காலியைப் போடுவார். ஆராதனை நடந்து கொண்டிருக்கும்போது, அந்த மனுஷர்களை அறிமுகப்படுத்தி, நாற்காலியில் அமரச் சொல்லுவார். பிறகு மற்ற மனிதர்களை நாற்காலிகளுக்கு பின்புறமாக நின்று நியமனம் பெறுவோரின் தோள்கள் மேல் கைகளை வைக்கச் சொல்லுவார். (அப்படிச் செய்ய நியமனம் பெறுவோருக்கு நெருக்கமாக பந்தமுள்ளவர்களாயிருப்பதை தேர்ந்தெடுத்து தெளிவாக அப்படிச் செய்வதில் சிந்தித்து செயல்படுவார்.) அப்படி நிற்பவர்கள், ஒவ்வொருவராக அமர்ந்திருப்பவர்களுக்காக ஜெபிப்பார்கள்.*

*நான் மூப்பராக நியமனம் பண்ணப்பட்ட போது அந்த உள்ளூர் சபையில்,*

*என்னுடைய தந்தை (முன்பதாக மூப்பர் பணியை அநேக உள்ளூர் சபைகளில் செய்தவர்) எனக்குப் பின்னால் நின்று என் தோளின் மேல் கைகளை வைத்து எனக்காக ஜெபம் பண்ணினார், நான் மிகவும் ஆழமாக நெகிழ்ச்சி அடைந்தேன். பின்னர், உதவிக்காரர்கள் நியமன ஆராதனையின்போது, நான் மிகவும் மெச்சிய கிறிஸ்தவ மனிதனுக்கு அப்படிச் செய்தேன். சகோதரர் பேஸ் அவர்களின் நடைமுறையை மிக உயர்வாக சிபாரிசு செய்கிறேன்.*

---

குறிப்புகள்

[1]*நியமன ஆராதனை ஒழுங்கு முறையில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் ஒவ்வொரு நகல் கொடுக்கலாம். ஆராதனை அறிவிப்புகள் இந்த ஆராதனை முறையில் அடங்கியிருக்கவில்லை. அறிவிப்பு கொடுப்பதாக இருந்தால் வழக்கமான நேரத்தில் கொடுக்கலாம்.* [2]*புதிய மூப்பர்கள் உறுதிமொழி எடுக்க வேண்டியதை முன் கூட்டியே அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள், அதினால் எப்பொழுது உறுதிமொழி கொடுக்க வேண்டும் என்று அறிவார்கள். ஆம் என்று எளிமையாகச் சொன்னாலே சரியான உறுதி மொழி.*